## இந்தியாவிலேயே

# அ.தி.மு.க.தான் ஊழல் கட்சி என்று சொன்னது யார்?

Indian National Development Inclusive Alliance அதாவது INDIA என்ற பெயரில் தி.மு.க தலைவர் அயராது எடுத்த முயற்சியால் எதிர்க்கட்சிகளின் கூட்டம் பெங்களூருவில் 2 நாட்கள் வெற்றிகரமாக நடந்து முடிந்திருக்கிறது. இதில் 26 கட்சிகள், அதில் மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்கள் மற்றும் 6 மாநிலங்களில் ஆட்சியில் இருக்கும் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இதனுடைய நோக்கம் ஆட்சி அதிகாரத்தை பிடிப்பது என்பதைவிட யார் இந்த நாட்டை ஆளவேண்டும் யார் ஆளக் கூடாது என்பதை தீர்மானிக்க வேண்டியது முக்கியம் என்றார் நம் முதல்வர் தளபதி. அரசியலமைப்பு, ஜனநாயகம், சமூக நீதி, மதச் சார்ப்பின்மை போன்றவைகளை பாதுகாப்பதோடு நாடு மற்றும் நாட்டு மக்களைப் பாதுகாப்பது இதன் தலையாய நோக்கம்.

இதன் அடுத்த கூட்டம் மும்பையில் என்று முடி வெடுக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைப்பு குழு 11 பேர் நியமனம் செய்வது மற்றும் டெல்லியில் இந்தக் கூட்டணிக்கான செயலகம் தொடங்குவது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இளைஞர்கள் அதிகம் இருக்கிற தேசம் இந்தியா. ஆனால் அந்த இளைஞர்களை பாதுகாக்க வேண்டிய பிரதமர் மோடி அரசு அதன் தார்மீகப் பொறுப்பிலிருந்து தவறிவிட்டது. போதைப் பொருட்களுக்கு அடிமையாகி அதிலிருந்து மீள முடியாமல் மாணவ-மாணவியர் இளம் தலைமுறையினர் சிக்கித் சீரழிந்து வருகின்றனர்.

அரசியல் எதிரியை எதிர்கொண்டு வெல்வது தான் வீரம். அதை விடுத்து முதுகில் குத்தி வீழ்த்துவது புறநானூற்று வீரமல்ல! செல்லுமிடமெல்லாம் தமிழைப் பற்றி பேசுகிறாரே பிரதமர் மோடி என்று கூறுபவர்கள் அவருக்கு புறநானூறு புத்தகத்தை வாங்கிக் கொடுத்து படிக்கச் சொல்லுங்கள்.

குற்றவியல் அவதூறு வழக்கில் 2 ஆண்டு தண்டனை நீதிமன்றம் வழங்கியது இந்தியாவிலேயே இதுவே முதல் முறை. ராகுல்காந்தியின் பாரத ஒற்றுமை பயணம் தொடங்கி வைத்தவர் எங்கள் தலைவர் தளபதி. அந்த பயணம் மிகப் பெரிய செல்வாக்கை ராகுல் காந்திக்கு மக்களிடையே உயர்த்தியுள்ளது. அதனால் மோடிக்கு வந்த பயம் சூரத் நீதிமன்றத்திலும் குஜராத் உயர்நீதிமன்றத்திலும் ராகுலுக்கு எதிரான தீர்ப்பு.

இதனால் ராகுல் காந்திக்கு மக்களிடையே அனுதாப அலை வீசுகிறது. தண்டனை தந்த சூரத் நீதிபதிக்கு மோடி அரசால் பதவி உயர்வு உடனே தரப்பட்டது. ஆனால் உச்ச நீதிமன்றம் அதற்கு தடைவிதித்து சம்மட்டி அடி தந்தது. எனவே உச்சநீதிமன்றத்திலும் ராகுலுக்கு நல்ல தீர்ப்பு கிடைக்குமென்று நம்பலாம்.

பிரதமர் மோடி எதிர்க்கட்சிகள் கூட்டணியை அலட்சியம் செய்தவர். போட்டோ எடுத்து மகிழட்டும் என்று ஏளனம் செய்தவர். அந்தமான் சென்று விமான நிலையத்தை திறக்காமல் காணொளி மூலமாக திறந்து வைத்துள்ளார். அந்த விமான நிலையத்திற்குப் பெயர் இந்திய மக்கள் இன்றும் நேசிக்கும் மகாத்மா காந்தியை சுட்டுக் கொன்ற வழக்கில் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்ட சாவர்கர் பெயரை வைத்துள்ளார்.



**வி.பி.கலைராஜன்**
செயலாளர்
தி.மு.க. இலக்கிய அணி

இவற்றையெல்லாம் மக்கள் பார்த்துக் கொண்டு தான் உள்ளனர். மோடிக்கு எதிர்க்கட்சிகள் ஒற்றுமையை பார்த்து ஏற்பட்ட பயம், பதட்டம் டெல்லியில் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்படாத பல கட்சிகளையும் சேர்த்து 38 கட்சிகள் சேர்ந்த NDA என்று அறிவித்துள்ளார். இதற்கு பெயர் போட்டோ ஷூட் தானா என்று நாம் கேள்வி கேட்கலாமா?

அந்த 38 கட்சிகளில் 24 கட்சிகளுக்கு மக்களவையில் 1 எம்.பி. கூட இல்லை 27 கட்சிகளுக்கு மாநிலங்களவையில் 1 எம்.பி. கூட இல்லை. 7 கட்சிகளுக்கு எந்த மாநிலத்திலும் 1 எம்.எல்.ஏ கூட இல்லை. இந்த நோஞ்சான்களையும் சவலைகளையும் வைத்துக் கொண்டுதான் சங்கிகள் கூட்டம் சவால் விடுகின்றனர்.

NDA 2014 தேர்தலில் 38 விழுக்காடு வாக்கு பெற்றதாம், 2019ல் 45 விழுக்காடு பெற்றதாம். எங்களுக்கு கிடைத்த கணக்கே வேறு! வாதத்திற்கு அமித்ஷா தரும் கணக்கையே வைத்துக் கொண்டாலும் அன்று NDA கூட்டணியிலிருந்த 9 பெரிய வாக்கு வங்கியுள்ள கட்சிகள் விலகி INDIA கூட்டணியில் இடம் பெற்றுள்ளன.

பீகாரில் 2019ல் 40 தொகுதிகளையும் NDA கைப்பற்றியது அதில் ஐக்கிய ஜனதாதளத்தின் 17 தொகுதிகள் அடங்கும். தற்போது நிதிஷ்குமார், லல்லுபிரசாத் யாதவ் INDIA அணியில் உள்ளனர். பீகாரில் 1 சீட் பா.ஜ.க. பெற்றாலே குதிரைக் கொம்பு தான். மகாராஷ்டிராவில் 48 தொகுதிகளில் பா.ஜ.க.23 தொகுதிகளில் வென்றது. அன்று உத்தவ் தாக்கரே சிவசேனா NDA கூட்டணியில் இருந்தது. இன்று சரத்பவார் தேசியவாத காங்கிரஸ், சிவசேனா, காங்கிரஸ் INDIA கூட்டணியில் உள்ளது. ஷிண்டேவிற்கும் அஜித் பவாருக்கும் மகாராஷ்டிரத்தில் தனிப்பட்ட செல்வாக்கு பெரியளவில் இல்லை. எனவே மகாராஷ்டிராவில் பா.ஜ.க.விற்கு எம்.பி. சீட் கிடைப்பது பகல் கனவு.

மேற்கு வங்கத்தில் 2019ல் பா.ஜ.க. 18 தொகுதிகளில் வென்றது. மொத்தம் 42 தொகுதிகள். திரிணாமூல் காங்கிரஸ், கம்யூனிஸ்ட், காங்கிரஸ் ஒன்று சேர்ந்து INDIA அணியில் உள்ளனர். மேற்கு வங்கத்தில் சமீபத்தில் நடந்த உள்ளாட்சித் தேர்தலில் 11 சதவீதமாக இருந்த கம்யூனிஸ்ட் வாக்கு 21 சதவீதமாக உயர்ந்துள்ளது. பா.ஜ.க. வாக்கு 38%லிருந்து 22% ஆக சரிந்துள்ளது பிறகு எங்கிருந்து பா.ஜ.க.விற்கு எம்.பி. சீட் கிடைக்கும்.

கர்நாடகாவில் 2019ல் 28 தொகுதிகளில் 25ல் வெற்றி பெற்றது. தற்போது நடந்த சட்டமன்றத் தேர்தலில் 224 தொகுதிகளில் 66ல் மட்டுமே வெற்றி பெற்றது. இவ்வளவிற்கு மோடியின் முகத்திற்காக வாக்கு என்று கேட்டும் மக்கள் நிராகரித்தனர். பா.ஜ.க.விற்கு குறைந்த அளவே எம்.பி.சீட் கிடைக்கும். மத்திய பிரதேசத்தில் 29 தொகுதிகளில் பா.ஜ.க. 28 தொகுதிகளில் வென்றது.

அங்கு காங்கிரஸ் எம்.எல்.ஏ க்களை இழுத்து காங்கிரஸ் ஆட்சியை கவிழ்த்து பா.ஜ.க. ஆட்சி அமைத்தது. அது மட்டுமின்றி பழங்குடியின இனத்தைச் சேர்ந்த இளைஞன் மீது பா.ஜ.க.வின் ஒருவர் சிறுநீர் கழித்து தனது மேலாதிக்கத்தை காட்டியதும் பிறகு முதல்வர் அந்த சிறுவன் காலை கழுவியதும் பா.ஜ.க. நடத்திய நாடகம் என்பது பழங்குடி மக்கள் நன்கு அறிந்ததே. அந்த மாநிலத்தில் 66 தொகுதிகளில் பழங்குடியினர் வாக்குகள் தான் அதிகம். புதிய நாடாளுமன்ற திறப்பு விழாவிற்கு பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர் என்பதற்காகவே இந்திய முதல் குடிமகள் ஜனாதிபதி திரௌபதி முர்மு அழைக்கப்படாததும் அவரை அவமதித்ததும் பழங்குடி இன மக்கள் மறக்கவில்லை. எனவே பா.ஜ.க. அங்கும் குறைந்த இடங்களிலேயே வெற்றிபெறும்.

இந்த சில நாம் சான்றுக்கு தந்தது. தமிழகத்தில் நியூஸ் 7 தொலைக்காட்சியில் மக்கள் தீர்ப்பில் INDIA கூட்டணிக்கு 66% INDIAக்கு 26% மக்கள் வாக்களித்துள்ளனர். என்ன ஆட்டம் போட்டாலும் எத்தனை ரெய்டு மிரட்டல் விட்டாலும் தி.மு.க கூட்டணிபாண்டிச்சேரிஉட்பட40க்கு40ம்வெற்றி பெற்றுவிடும்.

இதையெல்லாம் உளவுத்துறை மூலம் அறிந்து கொண்ட பிரதமர் மோடி ஊழல் வாதிகள் ஒன்று சேர்ந்துள்ளனர், குடும்பக் கட்சிகள் ஒன்று சேர்ந்துள்ளன என்று கோபத்தின் உச்சிக்கே சென்று INDIA கூட்டணி மீது நெருப்பைக் கக்கியுள்ளார். அதுவும் குறிப்பாக முக்கிய ஒன்றிணைப்பவர் எங்கள் தலைவர் என்கிற கோபத்தில் மத்திய பிரதேசத்தில் ஒரு கூட்டத்தில் தி.மு.கவை திட்டியுள்ளார். அமலாக்கத்துறை மூலம் ரெய்டு, வருமான வரித்துறை ரெய்டு இப்படி பல்முனைத் தாக்குதல் நடத்தி வருகிறார்.

இந்தியாவிலேயே ஊழல் ஆட்சி ஒன்று நடக்கிறதென்றால் அது எடப்பாடி ஆட்சி தான் என்று அமித்ஷா அன்றே பேசியுள்ளார். இது தி.மு.க சொல்லவில்லை, சொன்னவர் அமித்ஷா. ஊழல் செய்து கைது செய்து அடைக்கப்பட்ட முதல்வர் ஜெ.ஜெ.அம்மையார் தான் என்று அண்ணாமலை பேசினார். ஜெ.ஜெ.அம்மை யாரை விட 1000 மடங்கு திறன் மிக்கவர்கள் தன் மனைவியும், தாயும் என்று அண்ணாமலை பேசினார்.

இந்த முதிர்ச்சியற்ற அண்ணாமலையைப் பற்றி கேள்விகளை என்னிடம் கேட்காதீர்கள் என்று பத்திரிக்கையாளர்களிடம் கூறியவர் எடப்பாடியார் தான். பா.ஜ.க. தலைவர் பதவியிலிருந்து அண்ணாமலையை நீக்கவில்லையென்றால் பா.ஜ.க.வுடன் உறவு இல்லை என்று தீர்மானம் போட்டதும், பேசியதும் எடப்பாடியார் தான். இப்போது பா.ஜ.க.விலிருந்து அண்ணாமலையை நீக்கி விட்டார்களா? டெல்லியிலிருந்து அழைப்பு வந்தவுடன் மோடி பக்கத்தில் அமர வைத்தவுடன் உங்கள் வீராப்பெல்லாம் விலகி ஓடிவிட்டதா?

அண்ணாமலை ஜெ.ஜெ.அம்மையாரை பற்றிப் பேசியதை எடப்பாடியார் மறந்திருக்கலாம் அ.தி.மு.க தொண்டர்கள் மறக்க மாட்டார்கள் மன்னிக்கவும் மாட்டார்கள். பிறகு எப்படி பா.ஜ.க. கூட்டணிக்கு வாக்களிப்பார்கள்?

சேகர் ரெட்டி வீட்டில் வருமான வரித்துறை ரெய்டு, 2016ல் நடத்தி ரூ.100 கோடி பணம் 159 கிலோ தங்கம் எடுத்தது. அந்த வழக்கு சி.பி.ஐ. யால் 2020ல் தள்ளுபடி செய்யப்பட்டது. குட்கா ஊழல் வழக்கில் சிக்கிய அமைச்சர்களை விசாரிக்க சி.பி.ஐ. அனுமதி தரவில்லை 11 முறை வாய்தா சி.பி.ஐ. வாங்கி உள்ளது. அந்த ஊழல்வாதிகள் உத்தமர்கள் ஆகி விட்டார்களா?

குடும்பக் கட்சி என்கிறார் வசுந்தரராராஜேசிந்தியா ராஜஸ்தான் முதல்வராக இருந்தவர் அவரது தங்கை எம்.பி. அவரது தாய் பா.ஜ.க. நிறுவனரில் ஒருவர். அவரது அண்ணன் மகன் ஒன்றிய அமைச்சர் இது குடும்ப ஆட்சி இல்லையா? உத்திரபிரதேசத்தில் அரசியல் செல்வாக்கு மிக்க 51 குடும்பங்களில் 17 பா.ஜ.க. வினுடையது.

ஒன்றிய அமைச்சர்கள் பியூஷ்கோயல், கிரண் ரிஜ்ஜி அரசியல் வாரிசுகள் இல்லையா? உத்திரபிரதேசம், தெலுங்கானா, ஹரியானா மாநிலங்களில் நடந்த இடைத் தேர்தலில் பா.ஜ.க.வில் நிறுத்தப்பட்ட வேட்பாளர்கள் அனைவரும் வாரிசுகள் தான், இதனை மறுக்க முடியுமா? நாடாளுமன்றத்தில் இரு அவைகளிலும் உள்ள பா.ஜ.க. எம்.பி.களில் 12% பேர் வாரிசு அரசியலில் வந்தவர்கள் தான்.

அருணாச்சலப் பிரதேசத்தின் தற்போதைய முதல்வர் பேமாகாந்து அம்மாநில முன்னாள் முதல்வர் தோர்ஜி காந்துவின் மகன் தானே! மோடி அமைச்சரவையில் உள்ளவர்களில் 15% பேர் வாரிசு அரசியலில் வந்தவர்கள் தானே. ஒன்றிய அமைச்சர் அனுராக்தாகூர் இமாச்சல பிரதேச முன்னாள் முதல்வர் பிரேம்குமார் துமலின் மகன் தானே!

ராஜ்நாத்தின் மகன் பங்கஜ்சிங் உ.பியில் எம்.எல்.ஏ. ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் முன்னாள் ஒன்றிய அமைச்சர் தேபேந்திர பிரதானின் மகன். கர்நாடக முதல்வராய் இருந்த பொம்மை முன்னாள் முதல்வர் எஸ்.ஆர்.பொம்மையின் மகன். எடியூரப்பாவின் மகன் எம்.பி.ஆக உள்ளார். இப்படி ஒவ்வொருவராய் எழுதினால் பா.ஜ.க.வின் குடும்ப அரசியலை பக்கம் பக்கமாக எழுதலாமே.

இப்படி தன் முதுகில் அழுக்கை வைத்துக் கொண்டு பிறர் முதுகை சொரிந்திட முயல்கிறார் பிரதமர் மோடி. இது பிரதமர் மோடியின் விரக்தியின் உச்சம்! வேகத்தின் வெளிப்பாடு! கோபத்தின் குமுறல்! நம்பிக்கையின்மையின் நடுக்கம்.

பத்து ஆண்டுகள் பிரதமராக இருந்து விட்டீர்கள். 100 நாடுகளுக்கு மேல் பயணம் செய்து பார்த்து விட்டீர்கள். உங்களால் நாடு பெருமை அடைந்ததோ இல்லையோ நாட்டால் நீங்கள் பெருமை அடைந்து விட்டீர்கள். 2024 தேர்தலில் மக்கள் நிச்சயம் உங்களுக்கு ஓய்வு தரப் போவது உறுதி. INDIA உங்களுக்கு ஓய்வு தரப் போகிறது. நன்றாக ஓய்வு எடுங்கள். எங்கே பதினைந்து லட்சம். வருடத்திற்கு 2 கோடி பேருக்கு வேலை என்பதெல்லாம் அமித்ஷா பாணியில் சூம்லா தான்.



சென்னை நந்தனம், ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக வளாகத்தில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, வணிகவரித்துறையில் புதிதாக தொடங்கப்பட்டுள்ள 7 நிர்வாக கோட்டங்கள் மற்றும் 6 நுண்ணறிவு கோட்டங்களுக்காக ரூ.1.04 கோடி செலவில் புதிதாக வாங்கப்பட்ட 12 வாகனங்களைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். இவ்விழாவில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திருமதி.பா.ஜோதி நிர்மலாசாமி, முதன்மைச் செயலர் / வணிகவரி ஆணையர் தீரஜ் குமார். வணிகவரி இணை ஆணையர் (நிர்வாகம்) திருமதி.வே.இரா.சுப்புலெட்சுமி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டில் "மண் குளிர்ந்தது; மனமும் குளிர்ந்தது!

# முதல்வரின் நடவடிக்கை வேளாண் துறையை முன்னோக்கி அழைத்துச் செல்லும்!

### 'தினகரன்' தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜூலை 30-

'தினகரன் நாளேடு' தனது 29.7.2023 தேதிய இதழில் தமிழ்நாட்டில் முதல்வரின் நடவடிக்கையால் 'மண் குளிர்ந்தது விவசாயிகளின் மனமும் குளிர்ந்தது' என்ற விதத்தில் முதல்வருக்கு பாராட்டு தெரிவித்துள்ளது. மேலும் வேளாண் துறையை முன்னோக்கி அழைத்து செல்லும் நடவடிக்கை என புகழாரம் சூட்டியுள்ளது.

அது வருமாறு:-

காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை, சம்பா, தாளடி என 3 போகங்களில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இதில், குறுவை சாகுபடி சுமார் 5 லட்சம் ஏக்கரில் மேற்கொள்ள தமிழக அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. குறுவை சாகுபடியை விவசாயிகள் ஆர்வத்துடனும், அதிகளவிலும் மேற்கொள்ள தமிழக அரசு, கடந்த சில ஆண்டுகளாக குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தை அறிவித்து, நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டம் மூலம், விவசாயிகளுக்கு உரம், இடுபொருட்கள் போன்றவற்றை மானிய விலையில் வழங்கி, அரசு ஊக்கப்படுத்துவதால், உற்பத்தி செலவு குறைகிறது. அதன்படி, கடந்த 2021ம் ஆண்டு தமிழக அரசு, குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்துக்கு ரூ.61.90 கோடி, 2022ம் ஆண்டு ரூ.61.12 கோடி ஒதுக்கீடு செய்தது.

அதன்படி, விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு தலா ஒரு மூட்டை யூரியா, டிஏபி, அரை மூட்டை பொட்டாஷ் ஆகியவை மானியமாக வழங்கப்பட்டன. கடந்த ஜூன் 12ம் தேதி மேட்டூர் அணையை திறந்துவைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின், நடப்பாண்டு குறுவை சிறப்பு தொகுப்பு திட்டம் ரூ.75.95 கோடியில் அமல்படுத்தப்படும் என அறிவித்தார். அதன்படி, இந்த ஆண்டு டெல்டா மாவட்டங்களில் 5 லட்சம் ஏக்கரில் குறுவை நெல் சாகுபடி துவங்கியுள்ளது. தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 2 லட்சம் ஏக்கரில் குறுவை நெல் சாகுபடி நடக்கிறது. மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்ட நிலையில், குறுவை சாகுபடி பணிகள் தீவிரமடைந்தன. குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டம் குறித்த அறிவிப்பும் கூடவே வெளியானதால், விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்தனர். தற்போது, 50 ஆயிரம் ஏக்கரில் நாற்றங்கால் தயாரிப்பு பணியினை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர்.

இந்நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் திருச்சி வேளாண்மை - உழவர் நலத்துறை சார்பில் நடைபெற்ற"வேளாண் சங்கமம் 2023" விழாவில் பேசுகையில், "இந்த ஆண்டு சிறப்பு தொகுப்பு பெறுவதற்கான இறுதி நாளை, ஆகஸ்ட் 15 வரை நீட்டித்து தரவேண்டும் என்று டெல்டா மாவட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். அதை, தமிழக அரசு ஏற்கிறது. இதுதொடர்பாக அதிகாரிகளுடன் கலந்து பேசி, ரூ.75 கோடி மதிப்பிலான குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தை பெறுவதற்கான இறுதி நாள் ஆகஸ்ட் 15 வரை நீட்டிக்கப்படும்" என்றார். இந்த மகிழ்ச்சியான செய்தியை கேட்டு, விவசாயிகள் மனம் குளிர்ந்தனர். தமிழகத்தில் 6 ஆண்டுகளுக்கு பிறகு, கடந்த 202122ம் ஆண்டு 119 லட்சத்து 97 ஆயிரம் மெட்ரிக் டன் அளவில் உணவு தானிய உற்பத்தி நடந்துள்ளது.

இது, முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. ஆட்சி அமைந்த பிறகு, ஏற்பட்ட மகத்தான சாதனை ஆகும். உழவர்களின் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்து, நிலத்தடி நீரினை பயன்படுத்தி, உழவர்கள் அதிக பாசன பரப்பில் வேளாண் செய்ய ஏதுவாக கடந்த 2 ஆண்டுகளில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த சாதனை பயணத்தின் தொடர்ச்சியாக, மேலும் 50 ஆயிரம் புதிய மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கியுள்ளார். விவசாயம் சார்ந்த முதல்வரின் தொலைநோக்கு பார்வை காரணமாக, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டமானது இதுவரை 5 ஆயிரத்து 201 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மேலும் 2 ஆயிரத்து 504 ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட உள்ளது. இவை எல்லாம் தமிழகத்தில் வேளாண் துறையை முன்னோக்கி அழைத்துச்செல்லும் முதல்வரின் பெரும் நடவடிக்கை ஆகும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



தினகரன்
ஜூலை 29, 2023 சனிக்கிழமை
மனம் குளிர்ந்தது
காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை, சம்பா, தாளடி என 3 போகங்களில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இதில், குறுவை சாகுபடி சுமார் 5 லட்சம் ஏக்கரில் மேற்கொள்ள தமிழக அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. குறுவை சாகுபடியை விவசாயிகள் ஆர்வத்துடனும், அதிகளவிலும் மேற்கொள்ள தமிழக அரசு, கடந்த சில ஆண்டுகளாக குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தை அறிவித்து, நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டம் மூலம், விவசாயிகளுக்கு உரம், இடுபொருட்கள் போன்றவற்றை மானிய விலையில் வழங்கி, அரசு ஊக்கப்படுத்துவதால், உற்பத்தி செலவு குறைகிறது. அதன்படி, கடந்த 2021-ம் ஆண்டு தமிழக அரசு, குறுவை சிறப்பு தொகுப்பு


முத்தமிழறிஞர் கலைஞரின் பாராட்டுப்பெற்ற

## நம் முகமும் முகவரியும்

**தமிழக அமைச்சர் பெருமக்கள்,**
மாவட்டக் கழக செயலாளர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, மாநகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள், சொற்பொழிவாளர்களின் முகவரி நூல் (தொலைபேசி எண்களுடன்)

**இப்போது விற்பனையாகிறது**
**ஒவ்வொரு தோழர்களின் இல்லங்களிலும் இருக்க வேண்டிய நூல்**

**பக்கம் : 654**
**விலை : ரூ.600/-**

தொடர்பு கொள்ள :
**திருப்பூர் கூத்தரசன்**
அன்னை அஞ்சுகம் பதிப்பகம்
153/1, சாமையன் நகர்
எஸ்.ஆர்.கே.வி.(அஞ்சல்)
பெரியநாயக்கன்பாளையம்
கோவை - 641 020.
**செல் : 94863 24163**

(Advt)


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தாழை மு. கருணாநிதி
### ஜூலை 30 (1986)



**இளமைப் பருவம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டவர். தமிழக சட்டப்பேரவை உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினராக மக்களின் மகத்தான ஆதரவோடு தேர்ந்தெடுக்கப்பட்டவர்.**

**"மாவட்டச் செயலாளர்களில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கே அதிக வாய்ப்புத் தரவேண்டும் என்பது எனது ஆசை! எனது சொந்த மாவட்டத்திலேயே அந்த ஆசை,தாழை மு. கருணாநிதி மூலம் நிறைவேறியது. மாவட்டச் செயலாளர் பதவிக்கு தாம் எவ்வளவு பொருத்தமானவர் என்பதை தாழை தமது தொண்டால், உழைப்பால் நிரூபித்துக் காட்டினார்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**